**IN THE COURT OF THE I ADDL.DIST. COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS**

<u>அசல் வழக்கு எண்.**101/2017** பி.சா.**1**</u>

Name : சந்தானகிருஷ்ணன்

Father's name :

Village :

Taluk :

Caste :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.09.2024.

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் இந்த வழக்கில் 1 ம் பிரதிவாதி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஒன்பது ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்

பி.சா.ஆ 2 - 07.07.1936 ம் தேதி எனது பாட்டி நாராயணஅம்மாள் அவர்கள் பெயரிலுள்ள கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல்

பி.சா.ஆ.3 - 24.08.1962 ம் தேதி சுந்தரராஜநாயுடு, ஜெயராம்நாயுடு, கோவிந்தராஜ நாயுடு ஆகியோர்கள் கிருஷ்ணம்மாளுக்கு எழுதிக் கொடுத்த அடமானப்பத்திரத்தின் சான்றிட்ட நகல்

பி.சா.ஆ.4 - 29.08.1963 ம் தேதி சுந்தரராஜநாயுடு, ஜெயராம்நாயுடு, கோவிந்தராஜ நாயுடு ஆகியோர்கள் ஸ்ரீரங்கம்மாள் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல்

பி.சா.ஆ.5 - 10.10.1962 ம் தேதி எனது பெரியப்பா கோவிந்தராஜநாயுடு அவர்களுக்கு உரிய பங்கை முத்தையாசேர்வை என்பவருக்கு ஒத்தி ஏற்படுத்திக் கொடுத்த ஒத்திப்பத்திரத்தின் சான்றிட்ட நகல்

பி.சா.ஆ.6 - 09.03.1967 ம் தேதி மேற்படி சொத்தை கருப்பாயி மற்றும் அரசி ஆகியோருக்கு கோவிந்தராஜநாயுடு அவர்கள் எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல்

பி.சா.ஆ.7 -  19.03.1965 ம் தேதி எனது தகப்பானருக்கு ஏற்பட்ட பாகத்தினை ராமகிருஷ்ணநாயுடு என்பவருக்கு ஏற்படுத்திய ஒத்திப்பத்திரத்தின் சான்றிட்ட நகல்

பி.சா.ஆ.8 -  19.03.1965 ம் தேதி எனது தகப்பனார் மேற்படி சொத்தினை ஒத்தி வைத்ததை 13.06.1978 ம் தேதி எனதுதாயார் மீட்டதற்கான பி.சா.ஆ.7 ல் உள்ள குறிப்பின் நகல்

பி.சா.ஆ.9 -  எனது தாயார் ராணியம்மாள் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா பாஸ்புத்தகத்தின் நகல்

பி.சா.ஆ.10 - எனது தாயார் ராணியம்மாள் இறப்பிற்கு பின் எனது பெயரில் ஏற்பட்ட பட்டா பாஸ்புத்தகத்தின் நகல்

ஆகவே தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

குறுக்குவிசாரணை

வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் /-******

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

J.TAMILARASI
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.